10-03-2024 காலை முரளி ஓம் சாந்தி ''அவ்யக்த பாப்தாதா'' ரிவைஸ் 13.02.1999

## சிவ அவதாரம் மற்றும் சிக்கனத்தின் அவதாரம்

இன்று திரிமூர்த்தி சிவதந்தை தனது மிக அன்பிலும் அன்பான, இனிமையிலும் இனிமையான சாலிக்கிராம் குழந்தைகளை சந்திக்க வந்திருக்கின்றார். இன்றைய நாள் சிவன் மற்றும் சாலிக்கிராமின் விசேஷ நாளாகும். எனவே தந்தை குழந்தைகளை சந்தித்து குஷியடைந்து கொண்டிருக்கின்றார் - குழந்தைகளின் பிறந்த நாளை கொண்டாட தந்தை வந்திருக்கின்றார். நாம் தந்தையின் பிறந்த நாள் கொண்டாட வந்திருக்கிறோம் என்று குழந்தைகள் கூறுகிறீர்கள். தந்தைக்கும் குஷி இருக்கிறது, குழந்தைகளுக்கும் குஷி இருக்கிறது. ஏன்? ஏனெனில் இந்த பிறந்த நாள் முழு கல்பத்திலும் தனிப்பட்டது மற்றும் அன்பானதாகும். முழு கல்பத்திலும் இப்படிப்பட்ட பிறந்த நாள் வேறு யாருக்கும் கொண்டாடுவது கிடையாது. தந்தை மற்றும் குழந்தைகளுக்கு ஒரே நேரத்தில் பிறந்த நாள் ஏற்படுவது என்பது வேறு எந்த நேரத்திலும் யாருக்கும் ஏற்படாது. எனவே முதலில் பாப்தாதா குழந்தைகளுக்கு பல கோடி மடங்கு வாழ்த்துக்கள் கொடுத்துக் கொண்டிருக் கின்றார். குழந்தைகளின் வாழ்த்துக்கள் அமிர்தவேளையிலிருந்து மிகவும் உள்ளப்பூர்வமாக, மனதார வாழ்த்துக்கள் பாப்தாதாவிடம் வந்து சேர்ந்து விட்டது. பாப்தாதா அனைத்து குழந்தைகள், சாலிக்கிராம் பார்த்து குஷியில் இந்த பாடல் பாடுகின்றார் - ஆஹா செல்லமான குழந்தைகளே ஆஹா! ஆஹா தேடிக் கண்டெடுக்கப்பட்ட குழந்தைகளே ஆஹா! ஆஹா அலௌகீக பிறப்பு, அலௌகீக பிறந்த நாள் கொண்டாடக் கூடியவர்களே ஆஹா! பாப்தாதா ஒவ்வொரு குழந்தைக் காகவும் ஆஹா ஆஹா என்ற பாடல் பாடிக் கொண்டிருக்கின்றார். ஏனெனில் உலகிலுள்ள இவ்வளவு ஆத்மாக்களில் மிகக் குறைந்த குழந்தைகளாகிய நீங்கள் பல மடங்கு பாக்கிய வான்களாக ஆகியிருக்கிறீர்கள், வருங்காலங்களிலும் பாக்கியவான்களாக இருப்பீர்கள். அமர பாக்கியவான் களாக அரை கல்பம் இருப்பீர்கள். ஒரு பிறப்பிற்கான வரதானம் அல்ல, அநேக பிறப்பின் அமர வரதானிகளாக ஆகிவிட்டீர்கள். இப்படிப்பட்ட குழந்தைகளுக்கு தங்களது சுவ மானத்தின் நினைவு எவ்வளவு இருக்கிறது? இந்த அலௌகீக பிறந்த நாள் அல்லது அலௌகீக பிறப்பின் அளவற்ற ஆஸ்தியை பிறப்பு எடுத்தவுடனேயே குழந்தைகளுக்கு தந்தை கொடுத்து விட்டார். பிறந்தபுடநேயே நினைவு என்ற சிரேஷ்ட திலகம் ஒவ்வொரு குழந்தைக்கும் தந்தை கொடுத்து விட்டார். திலகம் அணியப்பட்டிருக்கிறது அல்லவா? பிராமண வாழ்க்கை எனில் திலகமும் அழிவற்றதாகும். பிராமணர்களின் நெற்றியில் திலகம் - இது சிரேஷ்ட பாக்கியத்தின் அடையாளமாகும்.

ஆக நீங்கள் அனைவரும் மற்றும் நாலாபுறங்களிலும் குழந்தைகள் தூரத்தில் அமர்ந்திருந்தாலும் மிகவும் ஆர்வம்-உற்சாகத்துடன் இந்த தனிப்பட்ட மற்றும் அன்பான பிறந்த நாள் கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள். கொண்டாடிக் கொண்டிருக்கிறீர்கள் தானே? தந்தை நமது பிறந்த நாள் கொண்டாடிக் கொண்டிருக்கின்றார், நாம் தந்தையின் பிறந்த நாள் கொண்டாடிக் கொண்டிருக் கிறோம் என்று அனைவரும் குஷியடைந்து கொண்டிருக்கிறீர்கள். எவ்வளவு

குஷி இருக்கிறது! குஷியை கணக்கிட முடியுமா? கணக்கிருக்கிறதா? இந்த அலௌகீக குஷியை கணக்கிடும் சாதனம் இந்த உலகில் உருவாக்கப்படவேயில்லை. கடல் அளவு போன்று குஷி இருக்கிறதா? என்று உங்களிடம் கேட்டால் நீங்கள் என்ன கூறுவீர்கள்? கடல் என்பது ஒன்றுமே இல்லை. நல்லது, ஆகாயம் அளவிற்கு இருக்கிறதா? ஆகாயத்தை விட உயர்ந்த இடத்தில் உங்களது வீடு இருக்கிறது, உங்களது சூட்சுமவதனம் இருக்கிறது. ஆகையால் யாரும் கணக்கிடவேயில்லை, கணக்கிட முடியாது. அந்த அளவிற்கு குஷி இருக்கிறது எனில் ஒரு கை அசையுங்கள். (அனைவரும் கை தட்டினர்). குஷி இருக்கிறது என்பதில் அனைவரும் கைகளை உயர்த்தினீர்கள், வாழ்த்துக்கள். இப்பொழுது அடுத்த கேள்வி (புரிந்து கொண்டீர்கள், அதனால் தான் சிரித்து கொண்டிருக்கிறீர்கள்). ஒவ்வொரு குழந்தையும் சதா மலர்ந்திருக்கும் ஆன்மீக ரோஜவாக பார்க்க பாப்தாதா விரும்பு கின்றார். பாதி மலர்ந்ததாக அல்ல, சதா மற்றும் முழுமையாக. மலர்ந்திருக்கும் மலர் பார்ப்பதற்கு எவ்வளவு பிரியமாக இருக்கிறது! பார்த்தாலே மஜா வருகிறது. சிறிகு வாடி விட்டால் என்ன செய்வீர்கள்? தூர ஒதுக்கி வைத்து விடுவீர்கள். பாப்தாதா ஒதுக்கி வைக்கமாட்டார். ஆனால் அவர்கள் சுயம் தூர விலகி விடுகின்றனர்.

இன்று கொண்டாடும் நாளாகும். முரளியை சதா கேட்டுக் கொண்டு தான் இருக்கிறீர்கள். இன்று நன்றாக குஷியில் மனதில் ஆடுங்கள், பாடுங்கள். மனதில் ஆடுங்கள், கால்களால் அல்ல. கால்களால் ஆட ஆரம்பித்து விட்டால் நன்றாக இருக்காது. ஆனால் குழந்தைகள் ஆடிக் கொண்டும் இருக்கிறீர்கள், இனிமையிலும் இனிய தந்தையின் மகிமை மற்றும் தங்களது அலௌகீக மகிமைக்கான பாட்டும் அதிகமாக பாடிக் கொண்டிருப்பதை பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கின்றார். பாபாவிற்கு உங்களது மனதின் சப்தம் வந்து சேர்கிறது. அனைத்து தேசங்களிலிருந்தும் சப்தம் வந்து கொண்டிருக்கிறது. தந்தையின் சப்தம் கேட்டுக் கொண்டும் இருக்கிறீர்கள் மற்றும் தந்தையும் உங்களது சப்தங்களை கேட்டுக் கொண்டிருக்கின்றார். ஹே உலகிற்கு மிக மிக அன்பான குழந்தைகளே நன்றாக ஆடுங்கள், நன்றாக பாடுங்கள், வேறு என்ன இருக்கிறது என்று தந்தையும் கூறுகின்றார். பிராமணர்களுக்கான வேலை என்ன? யோகா செய்வதும் என்னது? உழைப்பு இருக்கிறதா என்ன? யோகா என்பதன் பொருளே ஆத்மா பரமாத்மா வின் சந்திப்பாகும். சந்திப்பின் போது என்ன செய்வார்கள்? குஷியில் நடனமாடுவார்கள். தந்தை யின் மகிமைக்கான இனிமையிலும் இனிய பாடல் உள்ளம் தானாகவே பாடிக் கொண்டிருக்கிறது. பிராமணர்களுக்கான வேலையே இது தான் - பாடிக் கொண்டிருங்கள் மற்றும் ஆடிக் கொண்டிருங்கள். இது கடினமா? பாடுவது, ஆடுவது கடினமா? இல்லை அல்லவா! யாருக்கு கடினமாக தோன்றுகிறதோ அவர்கள் கை உயர்த்துங்கள். இன்றைய நாட்களில் ஆடுவது, பாடுவதற் கான சீசன் ஆகும். எனவே நீங்களும் என்ன செய்ய வேண்டும்? ஆடுங்கள், பாடுங்கள். எளிது தானே? எளிது எனில் தலைகளை அசையுங்கள். கடினம் கிடையாது தானே? தெரிந்திருந்தும் எளியதிலிருந்து விலகி கடினமானதில் சென்று விடுகிறீர்கள். கடினம் கிடையாது, மிகவும் எளிது. ஏனெனில் அரை கல்பம் கடினமான வாழ்க்கை கடந்தீர்கள் என்பதை தந்தை அறிவார். ஆகையால் இந்த நேரம் எளிதாகும். கடினம் என்று கூறுபவர்கள் யாராவது இருக் கிறீர்களா? அவ்வபோது கடினமாக இருக்கிறதா? சிலர் போகப் போக பாûதையை மறந்து வேறு ஒரு பாதையில்

சென்று விட்டால் கடினம் ஆகிவிடும் அல்லவா! ஞான மார்க்கத்தில் கடினம் கிடையாது. பிராமண வாழ்க்கை கடினமானது கிடையாது. பிராமணர்களுக்குப் பதிலாக சத்ரியர்களாக ஆகிவிடுவதால் சத்ரியர்களின் வேலையே சண்டை, சச்சரவில் வருவது. அவர்களுக்கு கடினமாகத் தான் இருக்கும் அல்லவா! யுத்தம் செய்வது கடினமாக இருக்கும், மகிழ்ச்சியை கொண்டாடுவது எளிதாக இருக்கும்.

இரட்டை அயல்நாட்டினர் மகிழ்ச்சியை கொண்டாடுபவர்கள் தானே! ஒரு கையை உயர்த்துங்கள். மகிழ்ச்சியாக இருக்கிறீர்களா? அங்கு சென்ற பின் குழப்பமடையமாட்டீர்களா? பாருங்கள், இன்று சிவஜெயந்தி, இதன் மகத்துவம் இரண்டு விசயங்களில் இருக்கிறது. ஒன்று இன்றைய நாள் விரம் இருப்பார்கள். இரட்டை அயல் நாட்டினர் கொண்டாடவே இல்லை. பாரதத்தில் தான் கொண்டாடுகின்றனர். ஆக இந்த நாளின் மகத்துவம் - விரதம் இருத்தல், இரண்டாவது விழித்திருத்தல். நீங்கள் அனைவரும் விரதமும் எடுத்துக் கொண்டீர்கள் தானே? விரதம் உறுதியாக எடுத்துக் கொண்டீர்களா? அல்லது சில நேரம் லேசாக, சில நேரம் பக்காவாக இருக்கிறீர்களா? பழுக்காத பொருள் பிடிக்குமா? வேகவைத்த அனைத்தும் நன்றாக இருக்கும் அல்லவா! ஆக என்ன விரதம் எடுத்துக் கொண்டீர்கள்? பாப்தாதா முதலில் கொடுத்த விரதம் என்ன? நினைவு என்ற திலகம் வைக்கப்பட்டதும் முதன் முதலில் எந்த விரதம் எடுத்துக் கொண்டீர்கள்? நினைவிருக் கிறதா? சம்பூர்ண பவித்திர பவ. தந்தை கூறினார், குழந்தைகள் தாரணை செய்தீர்கள். ஆக தூய்மைக்கான விரதம் என்றால் வெறும் பிரம்மச்சரியம் மட்டுமல்ல, பிரம்மாவைப் போன்று ஒவ்வொரு சங்கல்பம், வார்த்தை மற்றும் செயலில் தூய்மை - இதைத் தான் பிரம்மச்சாரி மற்றும் பிரம்மாச்சாரி என்று கூறப்படுகிறது. ஒவ்வொரு வார்த்தையிலும் தூய்மைக்கான அதிர்வலைகள் நிறைந்திருக்க வேண்டும். ஒவ்வொரு சங்கல்பத்திலும் தூய்மையின் மகத்துவம் இருக்க வேண்டும். ஒவ்வொரு செயலிலும், கர்மா மற்றும் யோகா அதாவது கர்மயோகியின் அனுபவம் வேண்டும் - இதைத் தான் பிரம்மாச்சாரி என்று கூறப்படுகிறது. பிரம்மா பாபாவைப் பார்த்தீர்கள் - ஒவ்வொரு வார்த்தையும் மகாவாக்கியம், சாதாரண வார்த்தைகள் அல்ல. ஏனெனில் உங்களது பிறப்பே சாதாரணமானது அல்ல, அலௌகீகமானது. அலௌகீகம் என்றாலே தூய்மை. எனவே தினமும் இரவில் தனக்கு ஆசிரியராகி சோதனை செய்யுங்கள் மற்றும் தனது சதவிகிதத்தின் அனுசாரம் தனக்குத் தானே மதிப்பெண் கொடுத்துக் கொள்ளுங்கள். 100 சதவிகிதம் ஆக வேண்டும். ஆனால் தினமும் தன்னைத் தான் பாருங்கள், மற்றவர்களைப் பார்க்காதீர்கள். பாப்தாதா பார்க்கின்றார் - தன்னைப் பார்ப்பதற்குப் பதிலாக மற்றவர்களைப் பார்க்க ஆரம்பித்து விடுகிறீர்கள், அது எளிதாக இருக்கிறது. இன்றைய நாள் சங்கல்பம், வார்த்தை மற்றும் செயலில் எவ்வளவு சதவிகிதம் இருந்தேன்? என்று தன்னைப் பாருங்கள்.

நீங்கள் இந்த ஆண்டு நாலாபுறங்களிலும் என்ன செய்தி கொடுத்தீர்கள்? மாற்றம் என்ற செய்தி அனைத்து நிகழ்ச்சிகளிலும் கூறினீர்கள். அங்கு இங்கு என்று எங்கு சொற்பொழிவு செய்தாலும் மாற்றம் என்ற தலைப்பில் மிகவும் நன்றாக சொற்பொழிவு செய்தீர்கள். ஆக இந்த ஆண்டு நாலா புறங்களிலும் சேவையில் மற்றவர்களையும் மாற்ற வேண்டும் என்ற இலட்சியம் மிகவும் நன்றாக விமரிசையாக செய்தி கொடுத்தீர்கள். பாப்தாதாவிற்கு குஷி. நீங்களும் தனக்குள்

சோதனை செய்யுங்கள் - தினமும், ஒவ்வொரு நாளும் எத்தனை சதவிகிதம் மாறி யிருக்கிறேன்? மாற்றம் முன்னேறும் கலையில் இருக்க வேண்டும், கீழிறங்கும் கலையில் கூடாது. பாப்தாதாவும் ஒவ்வொரு குழந்தையின் சார்ட் பார்க்கின்றார். அனைத்து குழந்தைகளையும் பார்க்கின்றாரா? அல்லது விசேஷமானவர்களது பார்க்கின்றாரா? என்று நீங்கள் யோசிக்கலாம். அனைத்து குழந்தை களின் சார்ட் பாப்தாதா அவ்வப்பொழுது பார்ப்பார், தினமும் பார்ப்பது கிடையாது. ஆனால் அவ்வப் பொழுது பார்க்கின்றார் - அவர்கள் கடைசியிலும் இருந்தாலும் அல்லது முதலில் இருந்தாலும். அனைவரும் சிரித்துக் கொண்டிருக்கிறீர்கள், சார்ட் என்ன என்பதை பாப்தாதா கூறிவிடலாமா? இன்றைய நாள் கொண்டாடும் நாள் அல்லவா! ஆகையால் கூறமாட்டேன். ஆனால் எதிர்காலத் திற்காக சைகை கொடுக்கின்றேன் - இன்றைய நாளின் மகத்துவம், விரதம் எடுப்பது என்றால் திட சங்கல்பம் செய்வது. உண்மையான பக்தன் ஒருபோதும் விரதத்தை விட்டு விடமாட்டார். பாப்தாதா குழந்தைகளுக்கு மீண்டும் எதிர்காலத்திற்காக சைகை கொடுத்துக் கொண்டிருக்கின்றார் - இப்பொழுதும் கூட முதல் அஸ்திவாரம் சங்கல்ப சக்தி அவ்வப்பொழுது அதிகம் வீணாகிறது, எதிர்மறையானது வீணானவை விட குறைவாக இருக்கிறது. இந்த சங்கல்ப சக்தியின் உபயோகம் எவ்வளவு சுயத்திற்காக அல்லது உலகிற்காக பயன்படுத்த வேண்டுமோ அவ்வளவு இன்னும் அதிகப்படுத்துங்கள். ஏனெனில் சங்கல்பத்தின் ஆதாரத்தில் வார்த்தை மற்றும் செயல் ஏற்படுகிறது. எனவே சங்கல்ப சக்தியில் மாற்றம் செய்யுங்கள். வீண் மற்றும் எதிர்மறையாக இருப்பதை மாற்றம் செய்து உலக நன்மைக்கான காரியத்தில் பயன்படுத்துங்கள். பாப்தாதா சங்கல்பத்தின் பொக்கிஷத்தை அனைத்தையும் விட சிரேஷ்ட பொக்கிஷம் என்று நினைக்கின்றார். ஆகையால் இந்த சங்கல்பத்தின் பொக்கிஷத்தில் சிக்கனத்தின் அவதாரமாக ஆகுங்கள். இன்றைய நாள் அவதார நாள் என்று கூறப்படுகிறது. ஆக பாப்தாதாவிற்கு அனைத்து குழந்தைகளின் மீது இந்த சுப ஆசை தான் இருக்கிறது - இன்றைய நாள் சிவ அவதாரத்தின் கூடவே நீங்கள் அனைவரும் சிக்கனத்தின் அவதாரமாக ஆகுங்கள். சங்கல்பத்தின் சிக்கனம் என்றால் வீணானவைகளில் பாதுகாப்பாக ஆகிவிட்டீர்கள், பிறகு அனைத்து பொக்கிஷங் களும் தானாகவே பாதுகாப்பாகி விடும். 99 சதவிகிதம் என்ன ஆகும்? 99 சதவிகிதம் வேலை செய்ய ஆரம்பித்து விடும். 99 சத விகிதம் என்னவாகும் என்று முன்பு யோசித்துக் கொண்டிருந்தீர்கள். ஏதாவது நடந்ததா என்ன? பிப்ரவரி வந்து விட்டது. ஒருவேளை ஏற்பட்டாலும் உங்களுக்கு என்ன இருக்கிறது? உங்களுக்கு ஏதாவது நஷ்டம் ஏற்பட்டதா? பயம் இருக்கிறதா? என்ன ஆகுமோ என்ற பயம் இருக்கிறதா? உங்களுக்கு நன்றாகவே நடக்கும். உலகத்தினருக்காக என்ன வேண்டுமென்றாலும் நடக்கட்டும், நீங்கள் பயமற்றவர்களாக மற்றும் சிரித்த முகத்துடன் விளையாட்டை பார்க்க வேண்டும். விளையாட்டில் இரத்ததையும் காண்பிக்கின்றனர், அன்பும் காண்பிக்கின்றனர். யுத்தத்தையும் காண்பிக்கின்றனர், நல்ல விசயங்களையும் காண்பிக்கின்றனர். பிறகு விளையாட்டில் பயம் இருக்குமா என்ன? என்ன ஆகும்? ஏன் நடந்தது? எதற்காக நடந்தது? இவ்வாறு யோசிக்கிறீர்களா? மஜாவுடன் அமர்ந்து பார்க்கின்றனர். இதுவும் எல்லையற்ற விளையாட்டாகும். ஒருவேளை சிறிதளவு பயம் ஏற்பட்டு விட்டால் - என்ன நடந்தது, ஏன் நடந்தது இவ்வாறு நடந்திருக்கக் கூடாது, ஏன் நடந்தது - இப்படிப்பட்ட ஸ்திதி உடையவர்களுக்கு பாதிப்பு ஏற்படும். நல்ல காட்சி களில் நல்ல ஸ்திதி, கெட்ட காட்சியில் ஸ்திதி கெட்டு விடுகிறது,

குழப்பத்தில் வந்து விடும். ஆகையால் 99 ஆக இருந்தாலும், 2 ஆயிரமாக இருந்தாலும் உங்களுக்கு என்ன? விளையாட்டை விளையாட விடுங்கள். மஜாவுடன் பாருங்கள். பயப்படாதீர்கள். ஐயோ, ஏன் இவ்வாறு நடந்தது? என்று சங்கல்பத்திலும் வரக் கூடாது. 99 ஆம் ஆண்டு என்னவாகும்? என்று அனைவரும் கேட்கின்றனர். ஏதாவது நடக்குமா? நடக்காதா? பாப்தாதா கூறுகின்றார் - நீங்கள் தான் இயற்கைக்கு சேவை கொடுத்திருக்கிறீர்கள் - நன்றாக சுத்தப்படுத்துங்கள், அதற்கு நீண்ட, பெரிய துடைப்பம் கொடுத்திருக்கிறீர்கள். பிறகு ஏன் பயப்படுகிறீர்கள்? உங்களது கட்டளைப்படி அது சுத்தப்படுத்து கிறது எனில் நீங்கள் ஏன் குழப்பத்தில் வருகிறீர்கள்? நீங்கள் தான் கட்டளை பிறப்பித்திருக்கிறீர்கள். எனவே ஆடாது, அசையாதவர்களாகி மனம் மற்றும் புத்தியை முற்றிலும் சக்திசாலியாக்கி ஆடாத, அசையாத ஸ்திதியில் நிலைத்து விடுங்கள். இயற்கையின் விளையாட்டை பார்த்துக் கொண்டே முன்னேறுங்கள். பயப்படாதீர்கள். நீங்கள் அலௌகீக மானவர்கள், சாதாரணமானவர்கள் அல்ல. சாதாரணமானவர்கள் குழப்பத்தில் வருவார்கள், பயப்படுவார்கள். அலௌகீகமானவர்கள், மாஸ்டர் சர்வசக்திவான் ஆத்மாக்கள் விளையாட்டை பார்த்து தனது விஸ்வ கல்யாணகாரி காரியத்தில் பிசியாக இருப்பார்கள். ஒருவேளை மனம், புத்தியை காலியாக வைத்திருந்தால் பயப்படுவீர்கள். மனம் மற்றும் புத்தியில் லைட் ஹவுஸ் ஆகி லைட் பரப்புவார்கள், இந்த காரியத்தில் பிசியாக இருந்தால் பிசியான ஆத்மாக்களுக்கு பயம் ஏற்படாது, சாட்சியாக இருப்பார்கள். ஏதாவது குழப்பம் ஏற்பட்டால் தனது புத்தியை சதா தெளிவாக வைத்துக் கொள்ளுங்கள். ஏன், எதற்கு புத்தியை பிசியாக அல்லது நிறைத்து வைத்துக் கொள்ளாதீர்கள், காலியாக வைத்துக் கொள்ளுங்கள். ஒரு தந்தை மற்றும் நான் அப்பொழுது தான் நேரத்தின் அநுசாரமாக கடிதம், டெலிபோன், டீ.வி அல்லது என்னவெல்லாம் சாதனங்கள் உருவாகியிருக்கிறதோ அதுவும் சென்றடையாது. ஆனாலும் பாப்தாதாவின் கட்டளைகள் தெளிவாக பெற முடியும். விஞ்ஞானத்தின் இந்த கருவிகளை ஒரு போதும் ஆதாரமாக ஆக்கிக் கொள்ளாதீர்கள். பயன்படுத்துங்கள், ஆனால் சாதனங்களின் ஆதாரத்தில் தனது வாழ்க்கையை உருவாக்கிக் கொள்ளாதீர்கள். சில நேரங்களில் விஞ்ஞான சாதனம் இருந்தாலும் கூட பயன்படுத்த முடியாமல் போய் விடும். ஆகையால் அமைதிக்கான சாதனம் - எங்கிருந்தாலும், எப்படிப்பட்ட பிரச்சனை இருந்தாலும் - மிகத் தெளிவாக மற்றும் மிக விரைவாக காரியத்தில் பயன்படும். ஆனால் தனது புத்தியின் லயன் தெளிவாக வைத்துக் கொள்ள வேண்டும். புரிந்ததா! சீக்கிரம் சீக்கிரமாக தங்கயுகம் (கோல்டன் ஏஜ்) வந்து விட வேண்டும் என்று நீங்கள் தான் வரவேற்றுக் கொண்டிருக்கிறீர்கள். ஆக தங்கயுகத்திற்கு இந்த சுத்தம் தேவை அல்லவா! எனவே இயற்கை நன்றாக சுத்தம் செய்யும்.

ஆக இன்றைய நாள் சங்கல்பம் அல்ல, திட சங்கல்பம் என்ன எடுத்தீர்கள்? சிக்கனத்தின் அவதார மாக ஆகியே தீர வேண்டும். சங்கல்பம், வார்த்தை, சாதாரண செயல் அனைத்திலும் சிக்கனம். இரண்டாவது விசயம் - புத்தியை சதா தெளிவாக வைத்துக் கொள்ளுங்கள். இதையே மற்றொரு வர்த்தையில் பாப்தாதா கூறுகின்றார் - உண்மையான உள்ளத்தில் இறைவன் இருப்பார். உண்மை யான உள்ளம், சுத்தமான உள்ளம். நிகழ்காலத்தில் உண்மை மற்றும் சுத்தம் அவசியமாகும். உள்ளத்திலும் உண்மை, குடும்பத்திலும் உண்மை மற்றும் தந்தையிடமும் உண்மை. புரிந்ததா! இன்றைய நாள் கூறக் கூடாது

என்று நினைத்தேன், ஆனால் கூறிவிட்டேன். பாப்தாதாவிற்கு அன்பு இருக்கிறது அல்லவா, ஆகையால் துளியளவு பலவீனமும் பாப்தாதாவினால் பார்க்க முடிய வில்லை. ஒவ்வொரு குழந்தையையும் தன்னைப் போன்று சம்பூர்னமாக பார்க்க பாப்தாதா விரும்புகின்றார்.

நாலாபுறமும் குழப்பம் இருக்கிறது, இயற்கையின் அனைத்து தத்துவங்களும் நன்றாக பிரச்சனை செய்து கொண்டிருக்கிறது, ஒரு திசையிலும் கூட குழப்பமின்றி கிடையாது. மனிதர்களிடத்திலும் குழப்பம் இருக்கிறது, இயற்கையும் குழப்பத்தில் இருக்கிறது. இந்த சிருஷ்டியில் இவ்வாறு நாலாபுறங்களிலும் குழப்பம் இருக்கும் போது நீங்கள் என்ன செய்வீர்கள்? பாதுகாப்பிற்கான சாதனம் என்ன? விநாடியில் தனது விதேஹி, அசரீரி அல்லது ஆத்ம அபிமானியாக ஆக்கிக் கொண்டால் குழப்பமான சூழலிலும் உறுதியாக இருக்க முடியும். இதில் நேரம் ஏற்படாதா? என்ன ஆகும்? இப்பொழுது சோதனை செய்யுங்கள் - ஒரு விநாடியில் மனம்-புத்தியை எங்கு விரும்பு கிறீர்களோ அங்கு நிலைக்கச் செய்ய முடிகிறதா? (டிரில்) இதைத் தான் சாதனை என்று கூறப்படு கிறது. நல்லது.

உள்நாடு-வெளிநாட்டிலுள்ள நாலாபுறங்களிலும் உள்ள தந்தையின் அன்பில் மூழ்கியிருக்கும் ஆத்மாக்களுக்கு, சதா தன்னை பிரம்மாச்சாரி ஸ்திதியில் நிலைக்கச் செய்யும் அன்பான, சகயோகி குழந்தைகளுக்கு, சதா ஒரு நாமம் மற்றும் சிக்கனத்தை காரியத்தில் பயன்படுத்தக் கூடிய தைரிசாலி குழந்தைகளுக்கு, சதா குழப்பத்திலும் உறுதியாக இருக்கக் கூடிய பயமற்ற ஆத்மாக் களுக்கு, சதா மகிழ்ச்சியில் கொண்டாடக் கூடியவர்களுக்கு, தந்தையின் நெருக்கத்தில் இருக்கக் கூடிய குழந்தைகளுக்கு அன்பு நினைவுகள் மற்றும் நமஸ்தே.

குழந்தைகளின் அனைத்து வாழ்த்து அட்டை கிடைத்தது. பாப்தாதா பார்த்துக் கொண்டிருக்கின்றார். அனைவரும் பிறந்த நாளுக்கான அட்டை மற்றும் அயல்நாட்டினர் அன்பான நாளுக்கான அட்டை அனுப்பியிருக்கின்றனர். அன்புக் கடலான தந்தை அனைத்து குழந்தைகளுக்கும் சிவராத்திரியின் கூடவே அன்பில் மூழ்கியிருக்கும் நாளுக்கான வாழ்த்துக்கள் கொடுத்துக் கொண்டிருக்கின்றார். வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள், வாழ்த்துக்கள்.

நாலாபுறங்களிலும் உள்ள உள்நாடு, நகரம், கிராமத்திலுள்ள குழந்தைகளுக்கு, முதலில் அனைத்து சிறிய சிறிய குக்கிராமத்திலுள்ள குழந்தைகளுக்கு அன்பு நினைவுகள் மற்றும் வாழ்த்துக்கள். கூடவே உங்கள் அனைவருக்கும் கூட வாழ்த்துக்கள். வாழ்த்துக்கள் எவ்வளவு கொடுப்பது! நீங்கள் எந்த அளவிற்கு தாரணை செய்ய முடியுமோ அதை விட அதிகமான வாழ்த்துக்கள்.

வரதானம் : அன்பு மற்றும் புதுமையின் அதாரிட்டியுடன் சமர்பணம் செய்விக்கக் கூடிய மகான் ஆத்மா ஆகுக.

யாருடைய சம்பந்தத்தில் வந்தாலும் அவர்கள் சம்பந்தத்தில் வந்து வந்து சமர்பன புத்தியுடை யவர்களாக ஆகிவிட வேண்டும். மேலும் தந்தை என்ன கூறினாரோ, அதுவே சத்தியம் என்று கூற வேண்டும். இதைத் தான் சம்பர்ன புத்தி என்று கூறப்படுகிறது. பிறகு அவர்களது கேள்வி அழிந்து விடும். இவர்களது ஞானம் நன்றாக இருக்கிறது

என்று மட்டுமே கூறக் கூடாது. ஆனால் இது புது ஞானம், இது புது உலகை கொண்டு வரும் - இந்த ஓசை வெளிப்படும் போது தான் கும்பகர்ணர்கள் விழிப்படைவார்கள். எனவே புதுமை என்ற மகான தன்மையின் மூலம் அன்பு மற்றும் அதாரிட்டி என்ற சமநிலையினால் சமர்பனம் செய்ய வையுங்கள். அப்போது தான் மைக் தயார் ஆகி விட்டது என்று கூறலாம்.

சுலோகன்: ஒரு பரமாத்மாவிற்கு பிரியமானராக ஆகும் போது உலகிற்குப் பிரியமானவர்களாக ஆகிவிடுவீர்கள்.